# என்.புதுப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை திருமதி.S. கவிதா

ந.க.எண்: 05/2023-2024/ ம.பி.எண்.5 நாள்: 25.10.2023

பொருள்: மனைப்பிரிவு - மோகனூர் வட்டாரம், என்.புதுப்பட்டி ஊராட்சி / கிராமம் - சர்வே எண்கள்: 284/3A – ல் அமைந்துள்ள 0.59 ஏக்கர் பரப்பு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவு - தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது - இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. மனுதாரர் K. கருப்பையா த/பெ லேட். கிருஷ்ணசாமி, 6/979 E.B.காலனி, பரமத்தி ரோடு, பெரியப்பட்டி, நாமக்கல் அவர்களின் கடிதம் நாள்: 04.11.2022.
2. நாமக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடிதம் எண்.இ4/10418/2021, நாள்:11.11.2021.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்.19799/2020/ போ,நாள்:26.04.2021.
4. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3) த் துறை, நாள் :04.06.2004.
5. அரசாணை எண்.79,வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3)) த் துறை, நாள்:04.05.2017.
6. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:31.01.2020.
7. அரசாணை எண்:141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ4(3))த் துறை, நாள்:23.09.2020.
8. அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நவ(4(3))த் துறை, நாள்:09.12.2020.
9. அரசு கடிதம் எண்.19113/நவ4(3).2017-1, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்:30.08.2017.
10. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்: 08.09.2017.
11. உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு நாமக்கல் அவர்களின் ந.க.எண்:NKL/6T96D9FW/2125/2022 நாள்: 17.09.2022.

ஆணை

பார்வை 11 - இல் காணும் மனுதாரர் நாமக்கல் உதவி இயக்குனர் மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் நடவடிக்கையின் படி மோகனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட என்.புதுப்பட்டி ஊராட்சி சர்வே எண்: 284/3A சர்வே எண்ணில் 0.59 ஏக்கர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்ட 12 மனைகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.

உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு நாமக்கல் அவர்களின் மனைப்பிரிவு நிபந்தனைகளில் தெரிவித்துள்ளவாறு உத்தேச மனைப்பிரிவில் அமைக்கப்பட்ட சாலைகளுக்காக 625.81 ச.மீ பரப்பளவும், பூங்காவிற்கு 176.18 ச.மீ பரப்பளவும் மற்றும் உள்ளாட்சிக்கு பொது உபயோகத்திற்காக 26.52 சதுர மீட்டர் பரப்பளவும் நாமக்கல் சார்பதிவாளர் ஆவண எண்: 4756/2022 இன் படி ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வை 11 ல் காணும் செயல்முறையில் பார்வை 2 ல் கண்டுள்ள அரசாணையின் படி உரிய கட்டணத்தை மனுதாரரிடம் தொடர்புடைய ஊராட்சி வசூல் செய்த பின்னரே மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்க வேண்டுமெனவும்,பார்வை 4 ல் கண்டுள்ள அரசு வழிகாட்டி மதிப்பீட்டில் ( GUIDE LINE VALUE) 3% சதவீத கட்டணத்தை வசூல் செய்த பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.79 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.05.2017 -ன் படி அரசு வழிகாட்டி மதிப்பீட்டில் 3% கட்டணமாக ரூ.10620/- (Challan Number : 20231019000989) உரிய அரசு கணக்கு தலைப்பில் 19.10.2023 அன்று செலுத்தி என்.புதுப்பட்டி ஊராட்சிக்கு சலான் நகல் வழங்கியுள்ளார்.

இதேபோன்று அரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:04.02.2019 ன் படி அனுமதியளிக்கப்பட்ட மனை ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 12 மனைகளுக்கு ரூ.12000/- த்தை என். புதுப்பட்டி ஊராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் Layout Development Charges என்கிற கணக்கில் (110104000427) 18.10.2023 அன்று செலுத்தி சலான் நகல் வழங்கியுள்ளார்.

எனவே மனுதாரரால் உரிய கட்டணத் தொகை செலுத்தப்பட்டுவிட்டதால் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு சர்வே எண்: 284/3A ல் 0.59 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள 12 மனைகளுக்கு இறுதி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

## நிபந்தனைகள்:

1. மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விவரங்களை மாற்றி அமைத்தல் கூடாது.
2. வரன்முறை செய்து வழங்கப்படும் மனைப்பிரிவுகளை வீடுகள் மட்டுமே கட்டுவதற்கு பயன்படுத்த வேண்டும். அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலைகள் எதுவும் ஏற்படுத்திட அனுமதியில்லை.
3. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து கட்டணம் செலுத்த வேண்டியிருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.
4. ஒவ்வொரு மனைப்பிரிவும் பத்திர பதிவு செய்யும் போது, மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்தே பத்திரம் பதிவு செய்திடல் வேண்டும்.
5. அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவார்.
6. பத்திர பதிவுகள் மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.
7. கட்டிட வரம்பு - சாலைக்கு 5 அடி விடப்பட வேண்டும்.
   ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட சாலைகளின் மின் கம்பங்கள் அமைத்து, தெருவிளக்குகள் அமைத்துக் கொள்ள ஒப்புதல் வழங்கப்படுகிறது.
8. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவினை வழங்கப்பட்ட உத்தரவால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
   மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறினால் இம்மனைப்பிரிவு அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

தலைவர்
என். புதுப்பட்டி ஊராட்சி
மோகனூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுதல்

K. கருப்பையா
த/பெ லேட். கிருஷ்ணசாமி,
6/979 E.B.காலனி, பரமத்தி ரோடு,
பெரியப்பட்டி, நாமக்கல்

நகல்-

1. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, நாமக்கல்.
2. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மோகனூர் வட்டாரம் - தகவலுக்காக.
4. சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், நாமக்கல் - தக்க நடவடிக்கைகள்.
5. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மோகனூர் வட்டம் தக்க நடவடிக்கைகள்.